தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1, திரு. சுரேஷ், அவரது சாட்சியத்தில், தான் தற்போது எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 13.10.2024 ந் தேதி 13.00 மணிக்கு எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது தானும் உதவி ஆய்வாளர் சாமுவேல் மற்றும் இரண்டாம்நிலைக் காவலர் வீரக்கதிரவன் ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக எரவாஞ்சேரி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கண்காணித்து வந்த போது கீரங்குடி பஸ்ஸ்டாப் அருகே கையில் துணிப்பையுடன் நின்று கொண்டிருந்த நபரை போலிசாராகிய எங்களை கண்டதும் மடக்கி பிடித்து மேற்படி உதவி ஆய்வாளர் விசாரித்த போது அவர் தனது பெயர் கலியமூர்த்தி மகன் மணிகண்டன் என்று கூறினார். மேலும் மேற்படி நபர் கையில் வைத்திருந்த துணிப்பையை மேற்படி உதவி ஆய்வாளர் சோதனை செய்த போது 180 மி.லி பிடிக்கக்கூடிய Pondy Jeffries Brandy மதுபான பாட்டில்கள் 2 இருந்தது என்றும், அதை மேற்படி உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்த போது அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லை என்று கூறினார் என்றும், பின்னர் எதிரியை குற்றம் காரணம் கூறி 13.00 அளவில் அதே இடத்தில் கைது செய்தார் என்றும், பின்னர் மேற்படி எதிரி வைத்திருந்த தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் 13.10 மணியளவில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், மேற்படி உதவி ஆய்வாளருடன் சென்ற நானும் இரண்டாம் நிலைக் காவலர் வீரக்கதிரவன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை 13.20 மணியளவில் சம்பவயிடத்திலேயே



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:15:46 +0530

கொட்டி அழித்து அழிப்பு மகசர் மேற்படி உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றும், அதிலும் தானும் இரண்டாம் நிலைக் காவலர் விரக்கதிரவன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அழிப்பு மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 134/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம் என்றும், உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2, திரு. திரு. சாமுவேல், அவரது சாட்சியத்தில், தான் தற்போது எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 13.10.2024 ந் தேதி 13.00 மணிக்கு எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது தானும் என்னுடன் இரண்டாம் நிலைக் காவலர்கள் திரு.சுரேஷ் மற்றும் வீரக்கதிரவன் ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக எரவாஞ்சேரி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கண்காணித்து வந்த போது கீரங்குடி பஸ்ஸ்டாப் அருகே கையில் துணிப்பையுடன் நின்று கொண்டிருந்த நபரை போலிசாராகிய எங்களை கண்டதும் ஓடியவரை மடக்கி பிடித்து தான் விசாரித்த போது அவர் தனது பெயர் கலியமூர்த்தி மகன் மணிகண்டன் என்று கூறினார் என்றும், **(சாட்சி ஆஜர் எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காண்படித்தார்)** மேலும் மேற்படி நபர் கையில் வைத்திருந்த துணிப்பையை தான் சோதனை செய்த போது 180 மி.லி பிடிக்கக்கூடிய Pondy Jeffries Brandy மதுபான பாட்டில்கள் 2 இருந்தது என்றும், அதைபற்றி தான் எதிரியிடம் விசாரித்த போது அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லை என்று கூறினார் என்றும், பின்னர் எதிரியை குற்றம் காரணம் கூறி 13.00



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:15:51 +0530

